# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2448 - 2025 අගෝස්තු මස 01 වැනි සිකුරාදා - 2025.08.01

2448 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1126 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1145 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1123 - B 82705- 403 (2025/08)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

பொதுச் சேவைகள் ஆணைக்குழு

**புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**பொது நம்பிக்கைப் பொறுப்புத் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகையீட்டின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025**

புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகையீட்டின் தரம் III இல் காணப்படும் சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தினை (01) நிரப்புவதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை** :

இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் பரீட்சார்த்திகளில் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பொது உளச்சார்பு மதிப்பீட்டு நேர்முகத் தேர்வு குழாமினால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வின் பெறுபேற்றின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்தி குறித்த வெற்றிடத்தினை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார். பொது உளச்சார்பு மதிப்பீட்டு நேர்முகத் தேர்வானது பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் நடைமுறைக்கமைவாக நடாத்தப்படும். (இலக்கம் 06 இனைப் பார்வையிடவும்).

நியமனம் வழங்கப்படும் திகதியானது பொதுச் சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள்:**

(i) கல்விசார் / தொழில்சார் தகைமைகள்
உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் எடுத்திருத்தல் வேண்டும்.

(ii) **அனுபவம் :**

உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பிறகு மூன்று (03) ஆண்டுகள் சட்டத்தரணியாகப் பணியாற்றியுள்ளதுடன் குறைந்தபட்சம் ஒரு செயலில் தொழில்முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.(செயலில் தொழில்முறை அனுபவத்திற்கான சான்றுசரிபார்ப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் பெறப்பட்ட அனுபவ காலம், சான்றுப்படுத்தியவரின் பதவி முத்திரை மற்றும் சான்றுப்படுத்திய திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்றத்தின் சட்டதரணியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் அரச நிறுவனத்தில் சட்டபூர்வ பதவியில் மூன்று ஆண்டுகளுக்கும் (03)குறையாத அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(செயலாளர்/திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவரால் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும்.)

குறிப்பு: அடிப்படைத் தகுதியை நிரூபிக்கும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். சேவைக் காலத்தின் ஆரம்ப மற்றும் இறுதித் திகதியை தெளிவாகக் குறிக்கும் சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் அறிவிப்பு இல்லாமல் நிராகரிக்கப்படலாம்.

* ஒரு சட்டப் பதவி என்பது, சட்ட ரீதியான பட்டம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகப் பதவியேற்றிருப்பது ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதியாகும்.

(iii) **உடல் ஆரோக்கியம் :**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **ஏனைய தகைமைகள் :**

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் நற் பண்புகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகமைகளையும் விண்ணப்பங்களை கோரும் இறுதி திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **பதவி தொடர்பான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அரசாங்கத்தின் எதிர்கால முடிவுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.நீங்கள் ஓய்வூதியத் திட்டம் / விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அதற்கான பங்களிப்பை நீங்கள் அவ்வப்போது அரசு நிர்ணயித்துள்ளபடி செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 வருட தகுதி காண் காலத்தினைக் கொண்டுள்ளது.குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 03 ஆண்டுகளுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) 2020.10.16ஆம் திகதியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை இல.18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின்படி, தகுதிகாண் காலத்தின் போது, ஏனைய அரச கருமமொழியில் (களில்) புலமையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனமானது பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை சார்ந்த விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, அரசாங்கத்தின் நிதி ஒழுங்குமுறைகளுக்கும் அவை தொடர்பாக அவ்வபோது வெளியிடப்டும் திருத்தங்களுக்கும் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பத்தில் விண்ணப்பித்த மொழி மூலமானது பின்னர் எச்சந்தர்ப்பத்திலேனும் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படாது. மேலும், நீங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலமானது நீங்கள் நியமனம் பெற தகுதியுடைய மொழி மூலமாக இருக்கும்.

4. **வயதெல்லை :**

விண்ணப்பங்களினைச் சமர்ப்பிக்கும் இறுதி திகதியன்று விண்ணப்பதாரியின் வயதானது 21 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை 11 இன்படி, இந்த பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது ரூபா: 82,150.00 -10 X 2,400 - 8 X 2,940 - 17 X 3,900 – ரூபா 195,970.00 (SL-1-2025)ஆகும்.

6. தகைமையினை மதிப்பீடு செய்யும் நேர்முகத் தேர்வில் பின்வரும் முறையில் புள்ளிகள் வழங்கப்படும்.

<table>
<tr><th>தொடர் இல.</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>அதிகூடிய புள்ளிகள்</th></tr>
<tr><td>01</td><td>மேலதிக கல்வித் தகைமைகள் :</td><td></td><td>25</td></tr>
<tr><td></td><td>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட சட்ட துறையில் முதுகலைமாணி பட்டம்.</td><td>25</td><td></td></tr>
<tr><td></td><td>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டத்துறையில் முதுகலைப் பட்டதாரி டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கற்கைகள் நிறுவகத்தில் இருந்து சட்டத்தில் பட்டதாரி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் வேண்டும்.</td><td>20</td><td></td></tr>
<tr><td></td><td>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து,</td><td></td><td></td></tr>
<tr><td></td><td>• முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்</td><td>15</td><td></td></tr>
<tr><td></td><td>• இரண்டாம் வகுப்பு மேல் நிலை சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்</td><td>10</td><td></td></tr>
<tr><td></td><td>• வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் பட்டம்</td><td>07</td><td></td></tr>
<tr><td></td><td>• சாதாரண சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்</td><td>05</td><td></td></tr>
<tr><td></td><td>(ஈ) சட்டக்கல்லூரி இறுதியாண்டில் முதல் வகுப்பில் தேர்ச்சி</td><td>10</td><td></td></tr>
<tr><td></td><td>சட்டக்கல்லூரி இறுதியாண்டில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி</td><td>05</td><td></td></tr>
<tr><td></td><td>(குறிப்பு : சிறப்புத் தேர்ச்சியுடனான சட்டக் கல்லூரி இறுதிப் பரீட்சை 05 புள்ளி களுக்கு மேல் தேர்ச்சி பெற்றால் மட்டுமே வழங்கப்படும்.)</td><td></td><td></td></tr>
<tr><td>02</td><td>மேலதிக அனுபவம் :<br>திறந்த நீதிமன்றத்தில் வழக்குகள் மற்றும் விளக்கக்காட்சிகள் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல்.
<table>
<tr><th></th><th>வழக்கு தாக்கல் செய்தல் (ஒரு வழக்குக்கு)</th><th>நீதிமன்றத்தில் ஆஜராகி உண்மைகளை முன்வைப்பதற்கான மதிப்பெண்கள்(ஒரு வழக்குக்கு)</th></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>மாவட்ட நீதிபதி</td><td>2</td><td>3</td></tr>
</table>
குறிப்பு: *மேற்கண்ட தகமைகளை நிரூபிக்க, சம்பந்தப்பட்ட தீர்ப்புகளின் நகல்களையோ அல்லது வழக்கின் கடைசி விசாரணை திகதியில் சான்றளிக்கப்பட்ட நகலையோ நேர்முக தேர்வுக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
<tr><td>03</td><td>தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய அறிவு<br><br>குறிப்பு: மிக உயர்ந்த தகமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.</td><td></td><td>10</td></tr>
<tr><td></td><td>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டப்படிப்புக்கான தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி அறிவியலினை பிரதான பாடமாக கற்றிருத்தல்.</td><td>10</td><td></td></tr>
</table>

| தொடர் இல. | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து அல்லது இலங்கை சட்டக்கல்லூரி அல்லது ஏனைய அரசாங்க அங்கீகாரம் பெற்ற தொழில்முறை யிலான நிறுவனம் ஒன்றிலிருந்து தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப சட்டத்தில் டிப்புளோமாவினைப் பெற்றிருத்தல். | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் டிப்புளோமா பெற்றிருத்தல் அல்லது வேறொரு நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்புளோமாவினைப் பெற்றிருத்தல். | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது இலங்கை சட்டக்கல்லூரி அல்லது ஏனைய அரசாங்க அங்கீகாரம் பெற்ற தொழில்முறை ஒரு நிறுவனத்தின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் சட்டத் துறையில் படிப்புகள் / பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பிறகு பெறப்பட்ட சான்றிதழ்கள். (அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்கள். ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| 04 | **மொழித் திறன் :**<br>**குறிப்பு**: மிக உயர்ந்த தகைமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | **15** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து ஆங்கிலத்தை முக்கிய பாடமாகக் கொண்டு பட்டம் பெற்ற பட்டதாரியாக இருத்தல் வேண்டும். | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய அளவிலான (Moot Court competitions)போட்டிகளில் காட்டப்படும் ஆங்கிலத்தில் புலமை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br><u>தனியாள்</u><br>I. முதல் நிலை/சிறந்த தகுதி - 12<br>II. இரண்டாம் இடம் -10<br>III. மூன்றாம் இடம் / ஏனைய தகைமைகள் - 08<br><u>குழுக்கள்</u><br>I. முதல் இடம் / சிறந்த திறன் -10<br>II. இரண்டாம் இடம் -08<br>III. மூன்றாம் இடம் / ஏனைய தகைமைகள் – 06 | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட ஆங்கில மொழியில் டிப்புளோமா அல்லது வேறொரு நிறுவனத்திலிருந்து ஆங்கில மொழிக்கு SLQF நிலை 3 அல்லது அதற்கு மேல் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனம்/அரசாங்க பயிற்சி நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து குறைந்தபட்சம் 1500 மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறியை பூர்த்தி செய்த பின்னர் ஆங்கில மொழியில் பெற்ற ஓர் டிப்புளோமா. | 10 | |
| | (ஈ) கல்விப் பொதுத்தரா தர (உயர்தரம்) பரீட்சையில் அல்லது Edexel அல்லது Cambridge உயர்தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் உயர் சித்தி பெற்றிருத்தல் அல்லது விண்ணப்ப இறுதி திகதியின் 02 ஆண்டுகளுக்குள் அல்லது IELTS தேர்வில் ஒட்டுமொத்த புள்ளிகள் 6.5 (ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 6 புள்ளிகளுடன்) அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL-IBT 79 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL-CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது TOEFL-PBT 550 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். | 08 | |

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *அதிகூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கிலம் அல்லது ஏனைய மொழிகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு ஏதேனுமொரு நிறுவனத்திலிருந்து ஆங்கில மொழியில் SLQF நிலை 2 இல் சித்தியடைந்த ஏதேனுமொரு சான்றிதழ். | 05 | |
| 05. | **நேர்முகத் தேர்வின் போது காட்டப்படும் திறமைகள்**<br>பதவியின் பங்கை பூர்த்தி செய்ய வேண்டிய விண்ணப்பதாரரின்<br>• வலிமை கேள்விகள் (Strength questions) (02 புள்ளிகள்)<br>• சூழ்நிலை முடிவுகளை எடுக்கும் திறன் (Situational questions)(03 புள்ளிகள்) மற்றும்<br>• திறன் கேள்விகள்(Competency Questions) (10புள்ளிகள்) மதிப்பீடு செய்யப்படும் வினாக்களுக்கு அளிக்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. | | 15 |
| | **மொத்தம்** | | 100 |

7. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துதல் :**

அனைத்து வகையிலும் முறையாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வின் போது அனைத்து சான்றிதழ்களின் மூல மற்றும் முறையாக சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளினைச் சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகத் தேர்வின் போது ஒருவரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) ஆட்களினைப் பதிவு செய்யும் ஆட் பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை.
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

8. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை :**

(i) விண்ணப்பங்களை "பொது நம்பிக்கைப் பொறுப்பு அலுவலகம், பொது நம்பிக்கைப் பொறுப்புத் திணைக்களம், இல. 2,புல்லர்ஸ் லேன், கொழும்பு 07" என்ற முகவரிக்கு 2025.09.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து முதல் பக்கத்தை 01 முதல் 04 வரையிலும், இரண்டாவது பக்கம் 05 முதல் 07 வரையிலும், மூன்றாவது பக்கம் 08 முதல் 09 வரையிலும் தயாரித்து தமது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், “நிறைவேற்று சேவையின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு” என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது, அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான் / சத்தியப் பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு / ஆயுதப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்கப் பணியில் நிரந்தரப் பதவியில் உள்ள இணைந்த மாதாந்த சம்பளம் ரூபா.47,615/- அல்லது அதற்கு மேல் பெற்றுக் கொள்ளும் அலுவலரினால் சான்றுரைக்கப்படுதல் வேண்டும்.

(v) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தாங்கள் பணியாற்றும் திணைக்களத்தின் தலைவரினூடாக தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் வடிவமைப்பிற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தொலைந்து போன அல்லது தாமதமான விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது

9. **தவறான தகவல்களை வழங்குதல் :**

ஆட்சேர்ப்புக்கு முன் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை என கண்டறியப்பட்டால், உங்களது விண்ணப்பமானது இரத்துச் செய்யப்படும் என்பதோடுஆட்சேர்ப்புக்குப் பின்னர் இதுபோன்ற பொய்யான அல்லது தவறான தகவல்கள் கண்டறியப்பட்டால், உரியநடைமுறைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்யப்படும்.

10. வெற்றிடத்தினை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரித்துடையதாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது வேறுபாடு காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்கும்.

12. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயல்முறையில் ஏதேனும் சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டால், பொதுச் சேவை ஆணைக்குழு எடுக்கும் முடிவுகளே இறுதியானவையாக இருக்கும்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி.

செயலாளர்,
புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

2025.07.21.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பொது நம்பிக்கைப் பொறுப்பு திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகையீட்டின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு -2025**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

(விண்ணப்பிக்கும் மொழிக்குரிய இலக்கத்தினை கூட்டில் இடவும்.சிங்களம்-2/தமிழ்3/ஆங்கிலம்- 4)

குறிப்பு:- விண்ணப்பிக்கும் மொழிமூலத்தினை மாற்றம் செய்ய முடியாது.

---

1.0

1.1 முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) :........................................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)........................................................................................................

1.2 முழுப் பெயர்:..................................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..................................................................................................

1.3. முதலெழுத்துக்களுடன் பெயர்(திரு./திருமதி/செல்வி):...........................................................................
(சிங்களத்தில் / தமிழில்) ............................................................................................................
உதாரணம்:எம்.ஜீ.எஸ்.பி.கே.குணவர்தன

1.4. முதலெழுத்துக்களுடன் பெயர்:..........................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)..........................................................................................................

2.0

2.1 நிரந்தர முகவரி:.............................................................................................................
(சிங்களத்தில் / தமிழில்)
2.2 நிரந்தர முகவரி:.............................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3.0

3.1 ஆண் / பெண் : ஆண் - 0 பெண் - 1 (உரிய இலக்கத்தினைக் கூட்டில் இடவும்.) ☐

3.2 குடியியல் நிலை:விவாகமானவர்-1 விவாகமாகாதவர் - 2 (உரிய இலக்கத்தினைக் கூட்டில் இடவும்). ☐

3.3 பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

3.4 2025 .................. .ஆம் திகதியன்று வயது: வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள்: ☐☐

3.5 தே. அ. அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 4.1. தொலைபேசி இல. :

நிலையான : ☐☐☐☐☐☐☐☐☐☐

கையடக்க : ☐☐☐☐☐☐☐☐☐☐

5.0

5.1 நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கான விண்ணப்ப படிவத்தில் கோரப்பட்டவாறான தகைமைகள் பற்றிய விபரங்கள்:

| தகைமையினைப் பெற்ற நிறுவனம் | பெற்ற திகதி |
|---|---|
| ............................................................ | ............................................ |
| ................................................................ | ............................................ |

6.0 உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட திகதி:.....................

6.1. உச்ச நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் 03 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த திகதி :.....................

6.2. அரசாங்க நிறுவனமொன்றில் நீதித்துறை சார்ந்த பதவியொன்றில் 03 வருட சேவைக்காலத்தை பூரத்தி செய்த திகதி :.....................

*அடிப்படைத் தகைமைகளினை நிரூபிக்கும் சான்றிதழ்கள் / ஆவணங்கள் விண்ணப்பதாரியினால் சான்றுப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

7.0. விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலின் இலக்கம் 06 இன் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் ஒவ்வொரு தகைமைகள் பற்றிய விபரங்கள்:-

7.1. மேலதிக கல்வித் தகைமைகள்:

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

7.2. மேலதிக தொழில்சார் அநுபவம்:

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

7.3 தகவல் தொழில்நுட்பம் சார்ந்த அறிவு:

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

7.4. மொழி ஆற்றல்:

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

*மேலதிக தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டிய அவசியமில்லை, நேர்முகத் தேர்வின் போது அத்தகைய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தயாராக வைத்திருப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

8.0. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தண்டிக்கப்பட்டுள்ளீர்களா?

(உரிய கூட்டினுள் (✓) இடுக) (ஆம் எனில் விபரிக்கவும்.)

| இல்லை | | ஆம் | |
|---|---|---|---|

.........................................................................................................................................

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பப் படிவத்தில் நான் வழங்கிய அனைத்துத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையும் என்பதையும், விண்ணப்பப் படிவத்தின் அனைத்துப் பகுதிகளும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும், நான் வழங்கிய இத்தகைய தகவல்கள் தவறானவை என நியமனம் செய்யப்படுவதற்கு முன் கண்டறியப்பட்டால், நான் தகமையற்றவனாவேன் என்றும் நியமனத்தின் பின்னர் கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் நானறிவேன் என்றும் சகல ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

................................................ ..........................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:

இந்த விண்ணபத்தினைச் சமர்ப்பிக்கும் திரு. / திருமதி / செல்வி ............................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் எனவும், அவர் என்முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

..........................................
கையொப்பத்தினை சான்றுப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

முழுப் பெயர் :
பதவிப் பெயர் :
திகதி :
(உத்தியோகபூர்வ இலச்சினையினை இடவும்)

11.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை:

மேற்குறித்த விவரங்களை வழங்கியுள்ள திரு./திருமதி/செல்வி .................................... இந்த நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்றும், அவர் வழங்கிய தகவல்கள் சரியானவை என்றும், அவரின் கடமை மற்றும் வருகை என்பன திருப்திகரமாக உள்ளன என்றும், அவர் மீது எவ்வித குற்றச்சாட்டும் இல்லை என்றும், இந்த பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம் எனவும் நான் சான்றளிக்கிறேன்.

.......................................................................
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் :
பதவிப் பெயர் :
முகவரி :
திகதி :
(உத்தியோகபூர்வ இலச்சினையினை இடவும்)

08-10

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி - யாழ்ப்பாணம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்புச் சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு (06) விடயங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூலை 11.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | உடுவில் | உடுவில் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலி தெற்கு பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் |

08-29

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்துக்கு, விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்கான சிறப்புச் சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு பாடம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அந்தபாடம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி.மீ. வரையிலான தூரத்தில், பிரிவுக்குள் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராமப் பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூலை 23.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மன்னார் | மன்னார் நகரம் | மன்னார் நகர மேற்கு பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |
| மன்னார் | மன்னார் நகரம் | எருக்கலம்பிட்டி பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |

08-30

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழி மூலம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./ த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி.மீ. வரையிலான தூரத்தில், பிரிவுக்குள் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூலை 23.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| பதுளை | பண்டாரவளை | பண்டாரவளை நகர பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

08-45

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### சிங்கள மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூலை 23.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| பதுளை | ஹாலி ஹெல | மாளிகாதென்ன பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுகிந்த பிரிவின் விவாகப் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

08-46

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்புச் சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு (06) விடயங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூலை 23.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| பதுளை | ஹல்துமுல்லை | கந்தபலை மேற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹப்புத்தளை பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |
| பதுளை | மீகஹாகிவுல | மீகஹாகிவுல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மீகஹாகிவுல பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

08-48

---

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

## 1877/27 ஆம் இலக்க 2014.08.28 ஆந் திகதிய இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணத்தின் 11.2 ஆம் பிரிவின் கீழ் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தின் தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புதல்

இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தில் வெற்றிடங்கள் நிலவும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்திலுள்ள பணிப்பாளர் பதவிகளுக்கு நியமிப்பதற்காக 1877/27 ஆம் இலக்க 2014, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள, 1996/25 மற்றும் 2016 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 2006.01.01 ஆந் திகதி முதல் வலுவிலிருக்கும், இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணத்தின் 11.2 ஆம் பிரிவின் பிரகாரம், 2025.08.29 ஆந் திகதிக்கு பந்தி 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிய தகுதிகளை பூர்த்திசெய்துள்ள இலங்கை விஞ்ஞான சேவையில் தற்போது செயற்திறன்மிக்க வகையில் சேவையில் உள்ள தரம் I ற்கு உயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கவனிக்க வேண்டியது:** நியமனத்தின் போது, இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் I க்கு பதவி உயர்வு பெற்றிருப்பது கட்டாயமாகும்.

01. **வெற்றிடங்களின் எண்ணிக்கை:**

| *தொடர் இலக்கம்* | *அமைச்சு* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 01 | தொல்பொருளியல் திணைக்களம் | பணிப்பாளர் | 01 |

02. **பதவி உயர்வுக்காக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:**

| *தொடர் இலக்கம்* | *திணைக்களம்* | *பதவி* | *தகைமைகள்* |
|---|---|---|---|
| 01 | தொல்பொருளியல் திணைக்களம் | பணிப்பாளர் | தொல்பொருளியல் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்திலுள்ள உத்தியோகத் தராகவிருத்தல் அல்லது திணைக்களத்திற்குள் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்த ரொருவர் இல்லாத சந்தர்ப்பங்களில் பதவிக்குரிய அடிப்படைத் தகைமைகளான 7.2.2.1 இல் குறிப்பிடப் பட்டுள்ள கல்வித் தகைமைகளான<br><br>இரசாயன விஞ்ஞானம் தொடர்பான 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்பு சித்தியுடன் கூடிய விசேட பட்டமொன்றினை பெற்றிருத்தல்<br><br>அல்லது<br><br>இரசாயன விஞ்ஞானம் தொடர்பான விசேட பட்டமொன்றுடன் இரசாயன விஞ்ஞானம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமாவொன்றினை பெற்றிருத்தல்<br><br>அல்லது<br><br>இரசாயன விஞ்ஞான பாடமாக பட்டமொன்றுடன் இரசாயன விஞ்ஞானம் தொடர்பான பட்டப்பின் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் |

03. **பதவிகளுக்காக தெரிவுசெய்யப்படும் முறை:**

(i) சேவை மூப்பு மற்றும் திறமைகளின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் அவ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் புள்ளிகள் நடைமுறைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கும் முறையான நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்படும். வெற்றிடங்களை நிரப்புவது பற்றிய இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினுடையதாகும்.

04. **புள்ளி வழங்கும் நடைமுறை:**

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| **1. சேவை மூப்புநிலை** | | **50** |
| I.I. இலங்கை விஞ்ஞான சேவையில் முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படும்.<br>➢ சிரேஸ்ட உத்தியோகத்தருக்கு அதிகபட்ச புள்ளிகள் வழங்கப்படும்.<br>மற்றைய உத்தியோகத்தர்களின் சேவைமூப்பு =<br>(சேவை மூப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகபட்ச புள்ளி x குறித்த உத்தயோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடம் x 12 + மாதங்கள்)) / (கூடியசேவை மூப்பு உத்தியோகத்தரின் மேலதிக சேவைக் காலம் (வருடம் x 12 + மாதம்)) | 50 | |

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 2. **திறமைகள்** | | **50** |
| 2.1. துறையுடன் தொடர்பான தனி மற்றும் குழு ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள : | | |
| I. ஆராய்ச்சி ரீதியான வெளியீடுகள் (Research Publication) - | | |
| ➢ வெளியிடப்பட்ட ஆராய்ச்சி ரீதியான வெளியீடுகள் (Local Research Publications) - ஒரு வெளியீட்டுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 2 வெளியீடுகளுக்காக | 04 | |
| ➢ சர்வதேச ரீதியாக வெளியிடப்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள் ( International Research Publications ) - ஒரு ஆராய்ச்சி வெளியீட்டிற்காக 03 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 2 வெளியீடுகளுக்காக | 06 | |
| II. சுருக்கம் (Abstracts) | | |
| ➢ இலங்கைக்குள் (Local ) - ஒரு சுருக்கத்திற்காக 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 02 சுருக்கங்களுக்காக | 04 | |
| ➢ சர்வதேச (International)- ஒரு சுருக்கத்திற்காக 2.5 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 02 சுருக்கங்களுக்காக | 05 | |
| III. ஆய்வுக் கட்டுரை - ஒரு ஆய்வுக் கட்டுரைக்காக 04 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் ஆராய்ச்சி கட்டுரை 1 இற்கு (க.எ: இரண்டாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை அல்லது I ஆம் தரத்திற்கு உயர்த்துவதற்கு தேவையாக கருதப்படுகின்ற பட்டப் பின் பட்டப்படிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையை தவிர்ந்த வேறு ஆராய்ச்சிகளுக்காகவும் புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| IV. புத்தாக்கம் / கண்டுபிடிப்பு - ஒரு புத்தாக்கம் / கண்டுபிடிப்பிற்காக 04 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் புத்தாக்கம் / கண்டுபிடிப்புக்கள் 02 ற்காக<br><br>"குறிப்பு - குறித்த உத்தியோகத்தர்களின் தலைமையின் கீழ் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கங்கள் என திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அது நேர்முகப் பரீட்சை குழுவினால் மதிப்பீடு செய்து புத்தாக்கம் அல்லது கண்டுபிடிப்பு என உறுதிப்படுத்தியதன் பின்னர் புள்ளிகள் வழங்கப்படும்." | 08 | |
| V. செய்தித்தாள் / சஞ்சிகைக் கட்டுரைகள் - ஒரு செய்தித்தாள் / சஞ்சிகைக் கட்டுரைகளுக்காக 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் செய்தித்தாள் / சஞ்சிகைக் கட்டுரைகள் 2 ற்காக | 04 | |
| VI. தெரிவு செய்யப்படும் பதவியின் கருமங்களுக்காக பங்களிப்பு செய்யும் விதம் தொடர்பில் கணினி மூலம் செய்யப்படும் 10 நிமிட முன்வைப்பு (Power Point Presentation)<br>I. தொடர்பு (Relevancy) - 03 புள்ளிகள்<br>II. ஆக்கத்திறன் / (Creativity ) - 03 புள்ளிகள்<br>III. அதற்காக அறிமுகப்படுத்தும் புத்தாக்க மற்றும் புதிய பரிந்துரைகள் (Innovations & Suggestions) - 03 புள்ளிகள்<br>IV. நேர முகாமைத்துவம் (Time Management) - 03 புள்ளிகள்<br>V. ஆங்கில மொழிப் புலமை (Proficiency in English) - 03 புள்ளிகள்<br><br>**குறிப்பு -**<br>(அ) மேற்படி (v) அளவுகோளின் கீழ் புள்ளிகளை பெற முடிவது விண்ணப்பதாரி ஆங்கில மொழியில் இவ் சமர்ப்பித்தலை செய்யும் போது மாத்திரம் ஆகும்.<br>(ஆ) முன்வைப்பதற்குரிய வன் பிரதியை (Hard copy) நேர்முகம் செய்யும் குழுவிற்கு அச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக ஆங்கில மொழி மூலம் சமர்ப்பிக்கும் முன்வைத்தலில் வன்பிரதியையும் இவ் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். | 15 | |
| **மொத்தப் புள்ளிகள்** | | 100 |

05. அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளுக்கும், இலங்கை விஞ்ஞான சேவைப் பிரமாணத்தில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1877/27 மற்றும் 2014 ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள) அப்பிரமாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் அல்லது திருத்தங்களுக்கு கட்டுப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆம் தரத்தில் வெற்றிடங்கள் நிலவுகின்ற மேற்படி பதவிகளுக்காக உரிய பதவிகளினது கடமையை பொறுப்பேற்கும் நாளிலிருந்து செயற்படும்படி உரிய பதவிகளுக்கு நியமித்தல் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்படும்.

06. இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்துள்ள தற்போது செயற்திறனோடு சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

07. கீழ்வரும் மாதிரிப் படிவத்திற்கமைய பூரத்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன், பதிவுத் தபாலில் 2025.08.29 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07." என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் 1 பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல்" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பான முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

08. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தல் மொழிகளுக்கிடையில் ஏதேனும் இணக்கப்பாடின்மை காணப்படின் மொழிமூல அறிவித்தலே வலுவானதாகும்.

09. விண்ணப்பப்படிவத்தை www.pubad.gov.lk இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

2025, யூலை 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தொல்பொருளியல் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்தின் பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பித்தல்

01. உத்தியோகத்தர் தொடர்பான தகவல் :

i. முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) :..............................................................................................................
(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
ii. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) Mr./Mrs./Miss :....................................................................
..............................................................................................................
(உதா: GUNAWARDHANA, H. M. S. K.)
iii. முழுப் பெயர் (சிங்களத்தில்):..............................................................................................................
iv. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்) :..........................................................................
v. பிறந்த திகதி :..............................................................................................................
vi. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் :.......................... மாதங்கள் :............................ நாட்கள் :...................................

vii. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................................................................................................

viii. நிரந்தர முகவரி: ……………………………………………………..........................................................................
.......................................................................................................................................................................

ix. தொலைபேசி இலக்கம் :
அலுவலகம் : ..........................
கையடக்க :................................

x. மின்னஞ்சல் முகவரி ……………………………………………………………………………...

02. பதவி தொடர்பான தகவல் :

i. தற்போதைய சேவை நிலையம் மற்றும் முகவரி :................................
ii. III ஆந் தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :................................
iii. II ஆந் தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :................................
iv. I ஆந் தரத்திற்கு நியமனம் பெற்ற திகதி :................................
v. தற்போது வகிக்கும் பதவி :................................
vi. அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :-

03. சேவை மூப்பு :

| | | |
|---|---|---|
| 01 | நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து விண்ணப்பம் கோரப் படும் இறுதித் திகதி வரை இலங்கை விஞ்ஞான சேவையில் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் | |
| 02 | நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதி வரை இலங்கை விஞ்ஞான சேவையில் தரம் I இல் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் | |
| 03 | சம்பளமற்ற லீவு உள்ளது /இல்லை என்பது பற்றி (சம்பளமற் லீவு பெற்றிருந்தால் பெற்றுக்கொண்ட நாட்களை குறிப் பிடவும்) | |

04. துறைக்குரிய தகைமைகள் :

4.1 குறித்த துறையில் ஈடுபாடு காட்டிய விசேட பங்களிப்பு :

| *ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்* | *விபரம்* | *குறித்த ஆண்டு* |
|---|---|---|
| ஆராய்ச்சி ரீதியான வெளியீடுகள்<br>I. தேசிய ரீதியாக வெளியிடப்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள்<br>II. சர்வதேச ரீதியாக வெளியிடப் பட்ட ஆய்வு வெளியீடுகள் | | |
| சுருக்கம்<br>I. இலங்கைக்குள்<br>II. சர்வதேச ரீதியாக | | |
| ஆய்வுக் கட்டுரை | | |
| புத்தாக்கம் / கண்டுபிடிப்புக்கள் | | |
| செய்திக் கட்டுரைகள் | | |

05. விண்ணப்பதாரியின் உறுதியுரை :
மேற்குறிப்பிட்ட தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானதும் சரியானதுமென இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ........................ ............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

II ஆம் பகுதி

(அமைச்சின் செயலாளரினால்/ திணைக்களத் தலைவரினால் நிரப்புதல் வேண்டும்)

............................................................................ அமைச்சின் / திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் I ஆந் தரத்துடைய உத்தியோகத்தரான .................................................................... திரு. / திருமதி / செல்வியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் பிரத்தியேகக்கோவையில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப சரியானது/பிழையானது. அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைச் செயற்பாடுகள் எதுவும் இல்லை / எடுக்கப்பட்டுள்ளது எனவும், அவ்வாறான செயற்பாடொன்று எதிர்வரும் காலங்களில் எடுப்பதற்கு கருதுவதாகவும் / இல்லை எனவும், விண்ணப்பங்கள் கோரும் திகதிக்கு உடன்முன்னரான 05 வருடங்கள் சம்பள ஏற்றத்தை உழைத்துள்ளார் / இல்லை எனவும், தயவுடன் அறியத்தருகின்றேன். அவரின் விண்ணப்பத்தை பரிந்துரை செய்கின்றேன்./ செய்யவில்லை.

........................................................
அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவரின் கையொப்பம்
உத்தியோகபூர்வ முத்திரை
திகதி :

08-50

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

**அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்**

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் சேவைப் பிரிவின் தரம் III அளவீட்டியல் பரிசோதனை உத்தியோகத்தர் (திணைக்களம் சார்ந்த) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2025

Open Competitive Examination for the Recruitment to the Posts of Grade III Metrology Experimental Officers (Departmental) of Department of Measurement Units, Standards and Services - 2025

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் சேவைப் பிரிவின் தரம் III அளவீட்டியல் பரிசோதனை உத்தியோகத்தர் (திணைக்களம் சார்ந்த) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2025, நவெம்பர் மாதத்தில் நடாத்தவுள்ள போட்டிப் பரீட்சைக்காக நிகழ்நிலை விண்ணப்பங்கள் பொறுப்பேற்றல் 2025, ஓகத்து 04 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 2025, செத்தெம்பர் 01 ஆந் திகதி இரவு 9.00 மணியுடன் முடிவடையும்.

01. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரியதுமாகும். விதவை/தபுதாரர் மற்றும் அநாதை பிள்ளைகளின் ஓய்வூதியத் திட்டத்துக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

(ii) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைவாக அரசாங்க சேவைக்கு இணைந்து கொண்ட மொழி மூலத்திற்கு மேலதிகமாகக் குறித்த காலப்பகுதியினுள் மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

02. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்:**

பதவிக்குரிய மாதாந்தச் சம்பளத் திட்டம்

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/ 2025 இன் கீழ் MN 4-2025 ரூபா 53,060.00 - 10 x 800 - 11 x 1190 - 10 x 1320 - 05 x 1350 - ரூபா 94,000.00 ஆகும்.

இச் சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைவாக நியமனம் அமுலாகும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்து மூன்று ஆண்டுகள் (03) செல்லுமுன் I ஆவது தடைதாண்டலிலும் II ஆம் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்று மூன்று ஆண்டுகள் (03) செல்லுமுன் 2 ஆவது தடைதாண்டலிலும் I ஆம் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்று ஐந்து ஆண்டுகள் (05) செல்லுமுன் 3 ஆவது தடைதாண்டலிலும் சித்தியடைய வேண்டும்.

03. **கல்வித் தகைமைகள்:** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பௌதீகவியல் பாடத்தைக் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் கற்ற விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

04. **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
(ii) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தன்று வயது 22 - 35 இற்கும் இடையில் இருக்க வேண்டும். (அதன்படி 2003.09.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பும் மற்றும் 1990.09.01 ஆந் திகதிக்குப் பின்னரும் பிறந்தவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கலாம்.) ;
(iii) சிறந்த நன்னடத்தையும் சிறந்த உடற் தகுதியும் உள்ளவராக இருத்தல் வேண்டும்;
(iv) விசேட தேவையுள்ள விண்ணப்பதாரிகள் இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதாக இருந்தால், அதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். மேலும் அதற்குரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு முறை :**

மேற்குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். எழுத்துப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒரு பாடத்தில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற வேண்டும். அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்த மதிப்பெண்களின் தகுதி வரிசையின் அடிப்படையில், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தினால் நடாத்தப்படுவதோடு அதில் அதிகபட்சமாக 25 மதிப்பெண்களைப் பெறலாம். எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதி வரிசையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதோடு அதற்குரிய பெறுபேறு ஆவணம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களப் பணிப்பாளரிடம் வழங்கப்பட்டபின், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அறிவிப்பதோ அல்லது பெறுபேறுகளை www.results.exams.gov.lk இல் வெளியிடுவது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

06. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

07. **எழுத்துப் பரீட்சை** :

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஒரு விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் விண்ணப்பிக்கும் மொழி மூலமே விடையளிக்க வேண்டும்.

இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

1. **நுண்ணறிவுப் பரீட்சை - மொத்தப் புள்ளிகள் 100 நேரம் : 1 மணி நேரம்**

பரீட்சார்த்தியின் தர்க்கத் திறன், கணிதச் சிக்கல்களைத் தீர்ப்பது தொடர்பான நுண்ணறிவு மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றைக் கண்டறிய வடிவமைக்கப்பட்ட இந்த வினாத்தாள் 50 பல்தேர்வு மற்றும் குறுகிய விடை வினாக்களைக் கொண்டதாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

2. **பொது அறிவு - மொத்தப் புள்ளிகள் 100 நேரம் : 1 மணி நேரம்**

பௌதீகவியலின் அடிப்படை எண்ணக்கருக்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் இலங்கையின் அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதாரப் போக்குகள் பற்றிய புரிதல் பற்றிய பொது அறிவைப் பரிசோதிப்பதற்காக வடிவமைக்கப்பட்டும் இந்த வினாத்தாள் 50 பல்தேர்வு மற்றும் சுருக்க விடை கொண்ட வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை : (அதிகபட்ச மதிப்பெண்கள் 25)**

கணினித் திறன், ஆங்கில மொழிப் புலமை, நேர்முகப்பரீட்சையின் போது வெளிப்படுத்தப்பட்ட திறன்களுக்காக அதிகபட்சம் 25 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

08. **விண்ணப்பிக்கும் முறை :**

I. விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk வலைத்தளத்தில் “Our Services” என்பதன் கீழுள்ள “Online Applications - Recruitment Exams/E. B. Exams” என்பதன் கீழ்க் காணப்படுவதோடு விண்ணப்பங்களை நிகழ்நிலையில் (Online) மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் பொறுப்பேற்றல் 2025, ஓகத்து 04 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 2025, செத்தெம்பர் 01 ஆந் திகதி இரவு 9.00 மணியுடன் முடிவடையும்.

II. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கும் மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை கணினியை அணுகப் பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசி எண்ணுக்குக் குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுரைப் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது அவ் அறிவுரைகளை சரியாகப் பின்பற்றவும், விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றதன் பின் விண்ணப்பப்படிவத்தில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

09. தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் அதிகாரிகள் தங்கள் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்காக விண்ணப்பத்தின் பிரதியை நிறுவனத் தலைவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் சேவைச் சான்றிதழ் கடிதமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10. வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்பவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அடிப்படையில், உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி, குறித்த திகதிக்கு அல்லது அதற்கு முன்னராக விண்ணப்பபங்களை நிகழ்நிலையில் சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் இணையத்தள அறிவிப்பு வெளியிடப்படும். அறிவிப்பு வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை என்றால், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். உங்களிடம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்காக பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும், கையில் வைத்துக்கொண்டு, பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை

இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிக்கும் படி அறியத்தருவதோடு, நீங்கள் கொழும்புக்கு வெளியேயுள்ள ஒரு பகுதியைச் சேர்ந்த விண்ணப்பதாரராக இருந்தால் விண்ணப்பதாரிகள் தொலைநகல் (Fax) மூலம் அனுமதி அட்டையின் பிரதியைப் பெற உங்கள் தொலைநகல் (Fax) இலக்கத்துடன் மேற்கூறப்பட்ட விபரங்கள் அடங்கிய கோரிக்கைக் கடிதத்தைத் தொலைநகல் (Fax) மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் விசாரிப்பதும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

10.1 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏதாவது நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி, அந்த நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் கையொப்பத்தை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். அப்படியில்லாத ஒரு விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபர்/ ஓய்வு பெற்ற அதிகாரி, தனது பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியபிரமாண ஆணையாளர் அல்லது ஒரு சட்டத்தரணி, ஒரு பிரசித்த நொத்தாரிசு அல்லது பௌத்த விகாரையொன்றின் தலைமை மதகுரு அல்லது வேறொரு மதத்தின் வழிபாட்டுத் தளத்திற்குப் பொறுப்பான மதகுரு ஒருவரிடமிருந்தோ உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

பரீட்சைக் கட்டணம் 600.00 ரூபாவாகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை முறையில் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மாத்திரமே கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணைய பரிவர்த்தனை வசதியுடைய எந்தவொரு வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Online Banking Method of Bank of Ceylon)
iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்கூறிய முறைகள் மூலம் பணம் செலுத்துவது குறித்த அறிவுரைகள் இணையத்தளத்தில் பரீட்சைக்கான தொழில்நுட்ப வழிமுறைகள் என்ற பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) உங்கள் கட்டணம் பெறப்பட்டதாகக் குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டியதோடு கட்டணம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்துவதில் ஏற்படும் எந்தவொரு பிழைகளுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பல்ல.

(உ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட தொகை எக்காரணம் கொண்டும் திரும்பச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சைக்கு மற்றப்படவோ மாட்டாது.

11. விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மேற்பார்வையாளரின் திருப்திக்கு ஏற்ப தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சைக்குத் தோற்றுவோர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியதாக முகத்தை மறைக்காமலும், மின்னியல் தொடர்பு சாதனங்களை அணியாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் காதுகளை மறைக்காமலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை விண்ணப்பதாரர்கள் தங்கள் முகத்தையோ அல்லது காதுகளையோ மறைக்கக் கூடாது. ஒரு விண்ணப்பதாரருக்குப் பரீட்சை அனுமதி அட்டை வழங்குவது, அவர் பரீட்சை எழுதுவதற்கோ அல்லது ஒரு பதவியைப் பெறுவதற்கான தகுதியாகவோ கருதப்படமாட்டாது. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகளுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்கள். அந்த விதிகளை மீறினால், அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும். பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே தங்கள் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதியட்டையைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

விசேட தேவைகள் உள்ள விண்ணப்பத்தாரர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதானால், அதை விண்ணப்பத்தில் கட்டாயமாகக் குறிப்பிடல் வேண்டும். மேலும் உரிய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

12. இந்த அறிவிப்பில் உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயத்திலும் முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரிடமே உள்ளதோடு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடக அறிவிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் சிங்கள அறிவிப்பே மேலோங்கும்.

எஸ். என். அக்குரந்திலக,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள்
பணிப்பாளர்,
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள்
திணைக்களம்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்,
மாஹேனவத்த, பிட்டிபன,
ஹோமாகம.
2020.07.18.

08-05

---

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர்
தொழில்நுட்பமல்லாத – (வகுதி 2) தரம் III விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கான முதலாவது
வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025

01. மேற்படி பதவிக்குரித்தான உத்தியோகத்தர்களுக்குரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகளுக்கு அமைவாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால், 2025, நவெம்பர் மாதம் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத் தரப்படுகின்றது.

02. I. இப் பரீட்சையானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் என்பதுடன், பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும்.

II. பரீட்சார்த்தியாகுவதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளன. இந்த சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றிற்கு அவர்கள் உட்பட வேண்டும்.

III. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடிவது இந்த அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான உத்தியோகத்தர்கள் மாத்திரமே ஆகும்.

03. **பரீட்சைக் கட்டணம் :**

இந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது மூன்று பாடங்களைக் கொண்டுள்ளது என்பதுடன், அதில் முதல் தடவையாக தோற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னரான தடவைகளில் மொத்தப் பரீட்சைக்கும் தோற்றுவதாயின் ரூ. 500.00 பெறுமதியான பரீட்சைக் கட்டணம் மற்றும் அவற்றுள் ஒரு பாடத்திற்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூ. 200.00 பெறுமதியான பரீட்சைக் கட்டணமும், இரண்டு பாடங்களுக்கு மாத்திரம் தோற்றுவதாயின் ரூ. 400.00 பெறுமதியான பரீட்சைக் கட்டணமும் அறவிடப்படும். இப் பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளரின் வருமானத் தலைப்பான 20-03-02-13 இல் வைப்பிலிடப்படும் வகையில், நாட்டில் உள்ள எந்தவொரு தபால்/ உப தபால் அலுவலகங்களிலேனும் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு அதன் ஒரு விளிம்பினை ஒட்ட வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளையோ அல்லது முத்திரையோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணமாக  செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்காக மாற்றம் செய்யப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

04. விண்ணப்பப் படிவம் :

விண்ணப்பப் படிவமானது இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய இருத்தல் வேண்டும். குறித்த மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய, A 4 அளவு தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன், தலைப்பு இலக்கம் 01 முதல் 07 வரையில் முதலாவது பக்கத்திலும், மீதி இரண்டாவது பக்கத்திலும் இருக்கும் வகையில் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயர், சிங்கள மொழி மூலமான விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி மூலமான விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமா ஆங்கிலத்திலும் இடப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவம் தட்டச்சு செய்து தயாரிக்கப்படலாம் எனினும், சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்துக்களால் பூரணப்படுத்த வேண்டும். அதற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரர்கள் தமது வலயக் கல்விப் பணிப்பாளர்/ பீடாதிபதி/ திணைக்களத் தலைவரூடாக 2025, செத்தெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் "பரீட்சை ஆணையாளர் நாயகம்" நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

பூரணப்படுத்தப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். அத்துடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமையவானதா என்பது தொடர்பில் விண்ணப்பதாரர் தேடிப் பார்க்க வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத பட்சத்தில் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்.

05. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களின் போதும் மண்டப பிரதானி திருப்தியடையக் கூடிய வகையில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழே தரப்பட்டுள்ள ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. தேசிய ஆளடையாள அட்டை ;
2. செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு ;
3. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோன்று பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரண்டு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறாக தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணம் முதல் பரீட்சை நிறைவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை மண்டபத்தினுள் விண்ணப்பதாரர்கள் தம்மை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதிருக்க வேண்டும்,

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் எனும் முன் தீர்மானத்தின் கீழ் விண்ணப்ப இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு, நிகழ்நிலை முறையூடாக மாத்திரம் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள், பரீட்சை மண்டப பிரதானிக்கு அவர்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்ட உடன் அது தொடர்பில் குறிப்பிடப்பட்ட அறிவித்தலொன்று செய்திப் பத்திரிகைகள் மற்றும்/ அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டையினை பதிவிறக்கம் செய்ய முடியவில்லை எனின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின், அவ் விபரங்களுடன் தொலை நகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை உடனடியாக பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பதாரரின் தொலை நகல் இலக்கம் ஒன்றையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதனூடாக விசாரிப்பது பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தங்கள் வசம் வைத்திருந்த விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப் படிவத்தை தபால் செய்தமைக்குரிய பற்றுச் சீட்டு ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும்.

07. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளரால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையுடன் கூடிய உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியுமான வகையில் திணைக்களத் தலைவர்கள் (தேசிய கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதி/ அதிபர்) கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணக் கட்டணம் செலுத்தப்படமாட்டாது.

08. பரீட்சை நடைபெறுவது சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களிலாகும். அதில் தாம் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதுடன், தோற்றும் அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் ஒரு மொழி மூலத்தில் மாத்திரமே விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னராக மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

09. விண்ணப்பப் படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் பரீட்சை மண்டப பிரதானியிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

10. **பரீட்சை நடைமுறை** : மேற்படி பதவிக்குரிய பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கியிருக்கும்.

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கான ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| 01. அலுவலக நடைமுறைகள் | 01 | 100 | 2 மணி | 40 |
| 02. நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அடிப்படை அறிவு | 02 | 100 | 2 மணி | 40 |
| 03. விடயம் சார் அறிவு | 03 | 100 | 1 ½ மணி | 40 |

(01) அலுவலக நடைமுறைகள் (கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாப் பத்திரமாகும்)

அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக நடைமுறைகள் தொடர்பில் அடிப்படை அறிவு

- அலுவலக நடைமுறைகள் தொடர்பான கோட்பாடுகள்
- அலுவலக நடைமுறைகள் தொடர்பான கோட்பாடுகளின் முக்கியத்துவம்
- அலுவலக நடைமுறைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் புரிதல்
- கோவைப்படுத்தல்

(02) நிதிப் பிரமாணங்கள் தொடர்பில் அடிப்படை அறிவு (கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாப் பத்திரமாகும்)

அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அறிவு

நிதிப் பிரமாணக் குறிப்பின் I, II ,III, IV, V ஆம் அத்தியாயங்களின் கீழ் ஒன்றிணைந்த நிதியம், வருடாந்த செலவு மதிப்பீடு, வருமான மதிப்பீட்டுக்கமைய செலவு செய்வதற்கு அதிகாரம் மற்றும் செலவுக் கட்டுப்பாடு தொடர்பான அறிவு, நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கு கிடைப்பனவு மற்றும் செலுத்துகைகள் தொடர்பான சாதாரண புரிதல்

(03) விடயம் சார் அறிவு

- தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள்
- விளையாட்டுப் பயிற்சித் திட்டங்கள்
- பாடசாலை விளையாட்டு சுற்றுநிருபங்கள்
- விளையாட்டு மைதானங்கள் மற்றும் உபகரணங்கள்
- முதலுதவி
- விளையாட்டு சட்ட திட்டங்கள் மற்றும் போட்டிக் குறிப்புக்கள்
- விளையாட்டு நெறிமுறைகள்
- தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் ஊக்க மருந்துகள்
- விளையாட்டு போசனை
  (மேற்படி விடயங்கள் சார் துறைகள் தொடர்பில் அடிப்படை அறிவு)

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக் கொண்டமையாக கருதப்படமாட்டாது.

12. இந்த பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் ஏதும் இருப்பின் அது தொடர்பில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி வசனங்களுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது பொருத்தப்பாடின்மைகள் இருக்கும் பட்சத்தில் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு,
“இசுருபாய”,
பத்தரமுல்ல,
2025, யூலை 22.

மாதிரி விண்ணப்பப் படிவம்

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத - (வகுதி - 2) தரம் III விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025
1st Efficiency Bar Examination for the Sports Trainers of Grade III Management Assistant – Non - Technical Service (Segment 2) in the Ministry of Education – 2025

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

☐
(அலுவலக பயன்பாட்டிற்கு மாத்திரம்)

சிங்களம் - 2
தமிழ் - 3

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : ..................................................................................
..................................................................................................................................................
(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் உள்ள பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் உள்ளவாறு பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :..................................................................................................
(உதா: GUNAWARDHANA H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (சிங்களம்/ தமிழில்) : ..................................................................................................
..................................................................................................................................................

02. சேவை நிலையம் மற்றும் முகவரி :

2.1 சேவை நிலையத்தின் தன்மை : ☐

(தேசிய பாடசாலை - 1, மாகாணப் பாடசாலை- 2, தே.க.கல்லூரி - 3)

(சேவை நிலையத்திற்குரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

2.2 சேவை நிலையத்தின் பெயர் : ..................................................................................

2.3 உத்தியோக முகவரி : ..............................................................................................

2.4 உத்தியோக முகவரிக்கான தபால் நகரம் : ..............................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் ) (இம் முகவரிக்கு அனுமதி அட்டை தபால் செய்யப்படும்)

2.5 சேவை நிலையத்திற்குரிய வலயக் கல்வி அலுவலகம்: .............................................
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
(தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம்)

03. பெண்/ ஆண் பால் நிலை:
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

04. கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

05. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

06. தற்போது வகிக்கும் பதவி (நியமனக் கடிதத்தின் தற்போதைய பிரதி): ..........................................

6.1 நியமனக் கடித இலக்கம் :..........................................................................................................

6.2 நியமனத் திகதி :.........................................................................................................................

6.3 இதற்கு முன்னராக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றியுள்ள தடவைகளின் எண்ணிக்கை: ☐

07. தாங்கள் தோற்றும் தடை தாண்டல் பரீட்சைக்குரிய பாடம்/ பாடங்கள்
(வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியைப் பார்க்கவும்)

| *தொடர் இல.* | *பாடம்* | *பாட இலக்கம்* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |

08. பரீட்சைக் கட்டணம் (பொருத்தமாயின் மாத்திரம்)

I. செலுத்திய தொகை : ரூ.

II. செலுத்திய தபால் அலுவலகம் :

III. பற்றுச்சீட்டு இலக்கம் :

பற்றுச் சீட்டின் ஒரு விளிம்பினை இங்கு ஒட்டவும் (பொருத்தமாயின் மாத்திரம்)
(பற்றுச் சீட்டின் நகல் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானதாக இருக்கும்)

09. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

மேற்படி விபரங்கள் சரியானவை எனவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையவர் என்பதாக உறுதி செய்வதுடன், இப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்களுக்கு நான் இணங்குகின்றேன் எனவும் உறுதியளிக்கின்றேன். உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதன் பற்றுச் சீட்டினை இங்கு ஒட்டியுள்ளேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

............................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்

திகதி :........................................

**குறிப்பு-** தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்கு பதில் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் முன்னிலையில் விண்ணப்பதாரர் கையொப்பமிடல் வேண்டும்.

10. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :

எனது அலுவலகத்தின்/ பாடசாலையின்/ கல்வியியல் கல்லூரியின்/ ஆசிரியர் கல்லூரியின்/ ஆசிரியர் நிலையத்தின் உத்தியோகத்தர் மற்றும் நான் தனிப்பட்ட ரீதியில் நன்கறித்த திரு./ திருமதி/ செல்வி .......................................... ............................................................ அவர்கள் .................................. ஆம் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். / உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டினை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும்
பதவி முத்திரை
(அண்மித்த பதவி நிலை உத்தியோகத்தர்/ அதிபர்)

பெயர் : ..........................................................................................................................

பதவிப் பெயர் : ..........................................................................................................................

முகவரி : ..........................................................................................................................

திகதி : ..........................................................................................................................

11. திணைக்களத் தலைவரின் உறுதிப்படுத்தல் :

1. மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரிசோதிக்கப்பட்டதாகவும்,
2. உத்தியோகத்தர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவசியமான தகுதிகளைக் கொண்டுள்ளார் எனவும்,
3. உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதலாவது தடவை ஆகையால் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச் சீட்டினை ஒட்டியுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................................................
திணைக்களத் தலைவர்/ வலயக் கல்விப் பணிப்பாளர்/ பீடாதிபதியின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை

பெயர் : ........................................................................................................................
பதவிப் பெயர் : ........................................................................................................................
முகவரி : ........................................................................................................................
திகதி : ........................................................................................................................

(பொருத்தமற்றதை வெட்டி விடுக.)

08-15

---

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

இலங்கை நில அளவைகள் திணைக்களம்

## 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் 41(2) மற்றும் 37(ஊ) பிரிவுகளுக்கு அமைய பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் ஒருவருக்கு முதல் தடவையாக தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை – 2025

நில அளவைகள் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள நில அளவையாளர் தவிர, ஏனைய பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குவதற்கான பரீட்சை தியதலாவ, நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தில் நடாத்தப்படும்.

02. இந்த பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு பிரிவுகளை உள்ளடக்கிய செயன்முறைப் பரீட்சை ஒன்றாகும். திணைக்களத்தின் நில அளவை ஒழுங்குவிதிகளுக்கு அமைய பரீட்சை நடாத்தப்படுவதுடன் மெட்ரிக் அலகுகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

I ஆம் பிரிவு - நில அளவை (Land Surveying) மற்றும் மட்ட அளவீடுகள் (Levelling) (தேர்ச்சி மதிப்பெண்கள்-60%)
II ஆம் பிரிவு - வரைபட வேலை (Plan Work) (தேர்ச்சி மதிப்பெண்கள்-60%)

03. பாடத்திட்டம் :

- இதற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள உபகரணங்களின் பாவனை தொடர்பான அறிவு

  - சங்கிலி (Chain)
  - நாடா (Tape)
  - கோணமானி
  - முழு அளவை மானி
  - மட்ட அளவை உபகரணங்கள்
  - உலகளாவிய வழிச்செலுத்துகை செயற்கைக்கோள் அமைப்பு (GNSS)

- நில அளவை தொடர்பான ஆரம்பப் புலனாய்வு, பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் ஒழுக்க நெறிமுறைகள், நில அளவைக்கு உரிய சட்டங்கள் ஒழுங்குவிதிகள் என்பன தொடர்பான அறிவு, ஆய்வுக் குறிப்புகளைத் தயாரித்தல், உபகரணங்களின் பாதுகாப்பு மற்றும் பாவனை தொடர்பான அறிவு.
- நில அளவைகள், ஆப்புக்கள், எல்லை இடுதல் தொடர்பான அறிவு.
- களக் குறிப்புக்களை எடுத்தல், ஒருங்கிணைப்புத் தாள்களைத் தயாரித்தல், பிழைகளைப் பகிர்ந்தளித்தல்.
- திட்ட வரைபடங்கள் மற்றும் அளவுத்திட்டம் தொடர்பான தெளிவு.
- பழைய திட்ட வரைபடங்களைச் சீர்செய்தல்.
- Auto CAD, SD CAD, ZW CAD ஆகிய மென்பொருட்கள் பற்றிய அறிவு மற்றும் திட்ட வரைபடம் ஒன்றினைத் தயாரித்தல்.
- TLDB மென்பொருட்களின் பாவனையின் மூலம் காணி விபரங்களின் பட்டியல்களைத் தயாரித்தல்.
- பரப்பளவுகளைக் கணிப்பிடுதல், நில அளவை அறிக்கை மற்றும் கோப்பினைத் தயாரித்தல்.
- ஆரம்ப மைல் கற்கள், மைல் கற்கள் மற்றும் கடல் மட்டத்திலிருந்தான உயரம் தொடர்பான அறிவு.
- மட்டம் தொடர்பான புத்தகங்களில் பதிவு செய்தல், மட்டங்களைச் சமநிலைப்படுத்தல் மற்றும் சமவுயரக் கோட்டுத் திட்ட வரைபடம் ஒன்றினைத் தயாரித்தல்.
- உலகளாவிய நிலைப்படுத்தல் அலகு (GPS) கட்டுப்பாட்டுப் புள்ளி, SLCORSnet, Radio RTK, GSM RTK, Network RTK தொடர்பான அறிவு.

04. **பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகள்:**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து அல்லது நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நில அளவை விஞ்ஞானமானி/ விஞ்ஞானமானி பட்டப்படிப்புச் சான்றிதழ்.

(ii) நில அளவைகள் சபையின் பதிவுச் சான்றிதழ்.

05. **பரீட்சைக் கட்டணங்கள் :**

பரீட்சைக்கு அனுமதிப்பதற்காக கொழும்பு 05, நில அளவையாளர் நாயக அலுவலகத்தின் சிறாப்பருக்கு, எந்தவொரு மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கும் அல்லது தியத்தலாவை நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்திற்கு அல்லது GovPay.lk இணையத்தளத்தின் ஊடாக ரூ. 20,000.00 தொகையினைச் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை எதிர்வரும் தேவைப்பாட்டிற்காக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.) எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகளோ அல்லது காசோலைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு ஒன்றின்றி முன்வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. **விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல்** :

(அ) இந்த அறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்ட உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய செ. மீ. 21 x செ. மீ. 29 (A4) அளவிலான தாள்களின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒன்றினை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2025, ஓகத்து மாதம் 14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்,
பரீட்சைகள் பிரிவு,
நில அளவையாளர் நாயக அலுவலகம்,
த. பெ. இல. 506,
கொழும்பு 05.

(ஆ) கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2025” எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(இ) வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்த வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் உரிய முறையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள, விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் என்பன நிராகரிக்கப்படும்.

07. இந்தப் பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் நேரம் பின்னர் அறியத்தரப்படும்.

08. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் குறித்துரைக்கப்படும் தினங்களில் பரீட்சைக்குத் தோற்றுதல் கட்டாயமானதாகும். இந்தப் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரினால் குறித்துரைக்கப்பட்ட நேர காலத்தில் களத்தில் வேலை செய்தல் வேண்டும் என்பதுடன் அதற்காக செயற்பாட்டு நிலையில் உள்ள அளவுத்திருத்தம் செய்யப்பட்ட, குறைபாடுகள் இல்லாத உபகரணங்களைக் கொண்டு வருதல் வேண்டும். பரீட்சிக்கும் நேரங்களில் விண்ணப்பதாரிகள் வேறு எந்த ஒருவருடனும் கதைத்தல் அல்லது கையடக்கத் தொலைபேசி/ தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தலை மேற்கொள்ளல் கூடாது. அவ்வாறு செய்யும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தகைமையற்றவர்கள் எனக் கருதப்படுவர். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தின் பணிப்பாளரினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

வை. ஜீ. ஞானதிலக,
தலைவர்,
நில அளவைகள் சபை.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
த.பெ.இல. – 506,
கொழும்பு - 05.
2025, யூலை 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. (அ) முழுப் பெயர்: ....................................................................................................
   (ஆ) முதலெழுத்துக்களுடன் பெயர் : ....................................................................................................
   (இ) பயன்படுத்தப்படும் பெயர் :....................................................................................................
2. நிரந்தர முகவரி: ....................................................................................................
3. தொலைபேசி இலக்கங்கள் :
   நிலையான :....................................................................................................
   கையடக்க :....................................................................................................
   மின்னஞ்சல் முகவரி :....................................................................................................
4. பிறந்த திகதி :....................................................................................................
5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் (பிரதி ஒன்றினை இணைத்தல் வேண்டும்) :........................................................
6. பதிவுச் சான்றிதழ் இணைக்கப்பட்டு உள்ளது/ இல்லை :....................................................................................................

7. பட்டப்படிப்புச் சான்றிதழ் இணைக்கப்பட்டு உள்ளது/இல்லை :..........................................................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :.......................................

விண்ணப்பதாரியின் கையொப்பம் :..............................................................

---

(நில அளவைகள் சபையின் தலைவரின் பயன்பாட்டுக்காக)

செயலாளர், நில அளவைகள் சபை,

தொழிற்துறையில் ஈடுபடுவதற்காக வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான பரீட்சையில் தோற்றுவதற்காக மேற்படி விண்ணப்பதாரிக்கு ........... ஆந் திகதி நடைபெற்ற நில அளவைகள் சபைக் கூட்டத்தின் போது அனுமதி வழங்கப்பட்டது.

திகதி :................................ ................................,

தலைவர்,
நில அளவைகள் சபை.

08-27

---

**திருத்தம்**

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் நிலவுகின்ற இலங்கை தொழில்நுட்பவியலாளர் உத்தியோகத்தர் (IIIஆந் தரம் மற்றும் பயிற்சித் தரம்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2444 மற்றும் 2025, யூலை மாதம் 04 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் நிலவுகின்ற இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் ( iii ஆந் தரம் மற்றும் பயிற்சித் தரம்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025 என்ற தலைப்பில் அமைந்த அறிவித்தலின் முதற் பந்தியில் முதலாவது உபபந்தி மற்றும் 1.0 ஆம் பந்தியின் 1.3 ஆம் உபபந்திக்குப் பதிலாக பின்வரும் பந்திகளை மாற்றீடு செய்வதன் மூலம் அவ்வறிவித்தல் திருத்தியமைக்கப்படுகிறது. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களில் மாற்றமில்லை.

1. **முதற் பந்தியின் முதலாவது உபபந்தி :**

விண்ணப்பம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழுள்ள “Online Applications - Recruitment Exams/E.B.Exams” இனூடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி முறைமை (Online) ஊடாக மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இணையவழி முறைமை மூலம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது 2025, யூலை மாதம் 07ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு திறக்கப்பட்டு 2025, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவடையும்.

2. **1.0 பந்தியின் 1.3 ஆம் உபபந்தி :**

1.3. **வயதெல்லை** :

2025.08.07 ஆம் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் என்பதோடு ஏனைய தகுதிகளும் அத் திகதியிலேயே பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

08-69

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2025**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 01.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2025 |
| | | வியாழன் | 07.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2025 |
| | | வெள்ளி | 15.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2025 |
| | | வெள்ளி | 22.08.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 07.08.2025 |
| | | வெள்ளி | 29.08.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2025 |
| **செத்தெம்பர்** | .. | வியாழன் | 04.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2025 |
| | | வெள்ளி | 12.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2025 |
| | | வெள்ளி | 19.09.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 04.09.2025 |
| | | வெள்ளி | 26.09.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2025 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 03.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.09.2025 |
| | | வெள்ளி | 10.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.09.2025 |
| | | வெள்ளி | 17.10.2025 | .. | நண்பகல் 12 | வியாழன் | 03.10.2025 |
| | | வெள்ளி | 24.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.10.2025 |
| | | வெள்ளி | 31.10.2025 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.10.2025 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.